IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
DEPOSITION OF WITNESS

S.C.NO.167/2021

Deposition of Witness for P.W.13

| | | |
|---|---|---|
| NAME | - | திரு.ரா.சதீஷ் |
| OCCUPATION | - | முதுநிலை உதவி மருத்துவர் |
| AGE | - | 41 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 25.02.2026.

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்.

முதல் விசாரணை-

நான் தற்போது குடியாத்தம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் முதுநிலை உதவி மருத்துவராக பணிபுரிகிறேன். கடந்த 27.04.2021 அன்று நான் அவசர சிகிச்சைப் பிரிவில் பணியிலிருந்தபோது விடியற்காலை 12.03 மணிக்கு வடிவேல் 46 வயது த/பெ.ஈஸ்வரன் என்பவரை அவருடைய தம்பி முன்னேஷ் Memo No.2/HOS/J3PS/2021 நாள்.26.04.2021 வேப்பங்குப்பம் காவல் நிலையத்திலிருந்து உதவி ஆய்வாளரிடம் இருந்து Memo வை வடிவேல் தம்பி கொண்டு வந்து கொடுத்தார். நான் வடிவேலை விசாரித்தபோது அவர் தன்னை அடையாளம் தெரிந்த 5 ஆண் நபர்கள் தன்னை உருட்டு கட்டை மற்றும் கைகளால் அவருடைய விளை நிலத்தின் அருகேயுள்ள மாட்டுக்கொட்டாய் அருகே 26.04.2021 மாலை 05.30 மணியளவில் தன்னை தாக்கியதாக சொன்னார். அவரை பரிசோதனை செய்தபோது அவர் சுயநினைவுடன் இருந்தார். 1) சிராய்ப்பு காயம் 2x1 செ.மீ. இடது முழுங்கை 2) இடுப்பு பகுதியில தொட்டால் வலி இருப்பதாக சொன்னார். அவரை புற நோயாளியாக சிகிச்சை அளித்து அவருக்கு ஏற்பட்ட

காயம் சொற்ப காயம் என சான்று அளித்தேன். விபத்து பதிவேட்டு அறிக்கை அ.த.சா.ஆ.9. காயச் சான்றிதழ் அ.த.சா.ஆ.10. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை-</u>

போலீசார் வழங்கிய Memo வில் வழக்கின் வரலாறு குறிப்பிடப்பட்டிருந்ததா என்றால் இருந்தது. காயம் 1 பழைய காயமா புதிய காயமா என்று நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். காயத்தினுடைய நிறம் குறித்து நான் குறிப்பிடவில்லை என்றால் சரி. இரண்டாவது காயம் பொய்யாக கூட இருக்கலாம் என்றால் வாய்ப்புள்ளது. உருட்டுக் கட்டையால் தாக்கினால் அவருக்கு எலும்பு முறிவோ கிழிந்த காயமோ ஏற்பட வாய்ப்பு உள்ளது. ஆனால் அது போல காயம் மேற்கண்ட நபருக்கு காணப்படவில்லை.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 25.02.2026 தேதியில் கையெழுத்திட்டார்.

P V SANDILYAN

Digitally signed by P V SANDILYAN
Date: 2026.02.25 20:07:46 +0600

Additional District Judge(FTC),
Vellore